

# பரலோக பொக்கிஷங்கள்

மேலானவைகளையே நாடுங்கள்! (கொலோசெயர் 3:2)

### கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்!


ஜீவியத்தின் ஒரு பகுதிகூட நமக்காக வைத்துக்கொள்ளாமல் "யாவையும்" கர்த்தரிடம் சரணடையச் செய்தவர்கள் பாக்கியவான்கள்! அப்படியானால், கர்த்தர் நிச்சயமாய் நமக்காக "யாவையும்" செய்து முடிப்பார்! (சங்.138:8).

நீங்களோ, விசுவாசத்தில் தளர்வடைந்து நீங்களாகவே கிரியை செய்திட முற்பட்டால், உங்களுக்காக கிரியை செய்திட வாஞ்சிக்கும் கர்த்தருடைய வல்ல கரம் உங்களைவிட்டு நீங்கும் துயரம் ஏற்படும்! அவ்வித துயர நேரத்தில் "கர்த்தாவே மன்னியும்! உமது வல்ல கரமே எனக்கு வேண்டும்! தயவாய் உமது கரத்தின் கிரியைகள் என்னைவிட்டு நீங்கிவிடாமல் நிலைத்திருப்பதாக!" என்ற உங்களின் தாழ்மையான சரணாகதி படைத்திடும் ஜெபத்திற்கு கர்த்தர் நிச்சயமாய் மனதிரங்குவார்! இனிமுதல் "அவரது கரத்தின் கிரியைகளை நெகிழ விடாமல்" உங்களுக்காக, யாவையும் செய்து முடிப்பார்! ஆமென்.

*-tr*

பெட்டகம் 40 பிப்ரவரி பரல்கள் 2

2024




## சுயாதீன துஷ்பிரயோகத்தில் வேதத்தையே புறக்கணிப்பதா?

"சுயாதீனம்" வேண்டுமா? ஆம், நிச்சயம் வேண்டும்! ஏனென்றால், அது தேவன் நம் யாவருக்கும் அருளிய ஈவு! ஆனால், "தேவபிரமாணங்களைத் தூக்கி எறிந்துவிட்டு" சுயவழி இச்சைகளை நிறைவேற்றுவதற்கல்ல இந்த சுயாதீனம்!! வேதபூர்வ திசையையே மாற்றும் சுயாதீனம், துன்மார்க்கம் அல்லவா?

ஒன்றில் துவங்கும் இவர்கள்.... ஒன்றன்பின் ஒன்றாய் "தேவபிரமாணத்துவத்தை" அவமதித்து "சுயாதீன" சுழல்காற்றில் தங்கள் மனம்போன போக்கில் தாறுமாறாய் போய் கொண்டிருக்கிறார்கள்! தங்கள் "போதைக்குக்கூட" சிறிய அளவில் துவங்கி, அது எல்லாம் ஒன்றுமில்லை எனக் கூறி.... போதைமருந்து வரை சென்றுவிடுகிறார்கள்! என்ன.....மதுபான தடைச் சட்டமா? அப்படியொரு பிரமாணம் வேண்டாம், வேண்டவே வேண்டாம், நாங்கள் சுயாதீனப் பிரியர்கள் என, தாங்களும் கெட்டு பிறரையும் கெடுக்கும் தவறான முன்னோடிகள்! எங்கும் நாகரீக வாழ்வின் மோகம் தலைவிரித்து ஆடும் காலமாகிவிட்டது! ஆகவே, வேத வசன வாசிப்பும், அதற்கு கீழ்படிவதும் ஏதோ சடங்காச்சாரமாய் மாறிவிட்டது!

யார் இவர்கள்? கிறிஸ்தவர்கள் என்ற பெயரில், தங்கள் இச்சையின் போக்கில் செல்ல விரும்பிய சுக- ஜீவிகள்! வேறு யாரும் அல்ல..... இவர்களே அந்திக்கிறிஸ்துக்கள்! ஏனெனில் அந்திக்கிறிஸ்துவின் மறுபெயரே "பிரமாணம் ஏதும் இல்லாதவன்!" என்பதுதான்.

*-Ed*

### 2024 'பரலோக பொக்கிஷங்கள்' சந்தா புதுப்பிக்கவும்

வருட சந்தா ரூ.170/- தயவுசெய்து உடன் **M.O** செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு பிப்ரவரி 20-ம் தேதிக்குள் அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.140/- அயல்நாடு ஒரு பிரதி ரூ.950/- அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் 'புதிது' என்று குறிப்பிடவும். நன்றி!

**ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!**
**சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!**

வங்கி கணக்கு: MADURAI CHRISTIAN FELLOWSHIP, Indian Bank - Koodal Nagar Branch
A/c No: **502087685** IFSC Code: IDIB000K150
(பின்பக்கம் உள்ள **QR** கோடு மூலமும் அனுப்பலாம்)
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள் 207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India Cell : 98430 49935 Ph (O) 0452 - 3585200
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : paralogapokkishangal

## இன்னும் உயர உயரச் செல்லுங்கள்!

*கர்த்தருடைய பர்வதம் ஏற தளர்ச்சி கூடாது*

*கர்த்தருடைய பர்வதம் ஏறி முன்னோக்கிச் சென்று 'வான் சிகரம் தொடும் வரை' கடந்து வந்த பள்ளத்தாக்கின் பனி மேகங்கள் நம்மை தடை செய்து விடக்கூடாது. இன்னும் அநேகர், இதுவரை வந்தது போதும் என்ற* **அபாய திருப்தியில்** *தேங்கி விடுகிறார்கள். சிகரத்தின் உச்சத்தில் மனம் குளிரச் செய்யும் இளம் பனியின் தூய்மையான சாரல் எத்தனை மகிழ்ச்சி என்பதை இவர்களால் புரிந்து கொள்ள முடிவதில்லை.*

> **"அந்த உச்சம் தொட்டு வாசம் செய்திடும் பரிசுத்த குடியிருப் பாளர்களின் உன்னத ஐஸ்வர்யம் எவ்வளவு பரவசமானது என்பது, பாதியில் திருப்தி கண்டவர்களுக்கு தெரிவதில்லை.**

*அவர் வாசம் செய்திடும் ஸ்தலத்தின் ஜன்னல்கள் புதிய எருசலேம் நோக்கி திறக்கப்பட்டு தெய்வ கானமும் மகிழ்ச்சியும் உள்ளே பிரவேசித்து, அவர்களை ஆசீர்வதிப்பதை பாதி நிலையில் திருப்தி கண்டவர்களால் அனுபவிக்க முடிவதில்லை. நிலக்கரி சுரங்கத்தின் பாதி வழியை கடந்து வந்தவர்கள், வெளியில் சூரியனை காணாமலே தேங்கி விட்டார்கள்! கண்ணீரின் பள்ளத்தாக்கை உருவ நடந்து வந்திருந்தால், உச்சத்தில் காத்திருக்கும் ஆனந்த தைலத்தால் அபிஷேகம் பெற்றிருப்பார்கள்! லீபனோனின் பரவச தேசத்திற்குள் பிரவேசிக்காமல் 'குழியிலேயே' இவர்கள் தேங்கிவிட்டது ஏன்? அது, அவர்களுடைய சோம்பலின் விளைவா? லோக கவலையா? மானிட துக்கமா? அல்லது மானிடரால் ஏற்பட்ட துரோகமா? அது, என்னவாய் இருந்தாலும், நீங்கள் கிறிஸ்துவிடமிருந்து சுதந்தரித்த தூய்மையான நற்குண அன்பை பாதித்திட யாதொன்றை அனுமதித்தாலும், அது உங்களுக்கு பெரு நஷ்டம் அல்லவா? கர்த்தரே உங்களுக்கு எல்லாமுமாய் மாறி! உங்கள் வாழ்வின் மையத்தை அலங்கரித்து! உங்கள் ஆத்தும மனமகிழ்ச்சியின் ஆதாரமாய் இருப்பாராக! என்றே உங்கள் யாவரையும் வாழ்த்துகிறேன்!*

'குட்டையான வளர்ச்சியில்' இனியும் தங்கி விடாதீர்கள். இன்னும் உயர உயர ஓர் சம்பூர்ண ஜீவியத்திற்கே தீராத வாஞ்சை கொள்ளுங்கள். இன்னும் முன்னேறிச் செல்லுங்கள்.... தேவனுக்கு அருகில் செல்லும்வரை ஓயாதிருங்கள்.

தங்கள் முழு இருதயம் கொண்டு, உச்சம் தொடும் பக்தி வாழ்க்கை வாழ ஆசைப்படுகிறவர்கள் வெகு சிலரே இருக்கிறார்கள். மற்றொரு வகையில் மலையின் உச்சி ஏற பயப்படும் கிறிஸ்தவ மாந்தர்களும் இருக்கிறார்கள்! சிலருக்கு உச்சிப் பாதையின் 'கரடு முரடு' அவர்களை கலங்கடித்து விடுகிறது.

> **"பள்ளத்தாக்கின் பாதியில் நின்றவர்கள் உச்சத்தில் குவிந்து கிடக்கும் தேவ இரகசியங்களை கற்றுக்கொள்ள முடிவதில்லை. இவ்வாறு சுயத்தின் - அரவணைப்பில் எவ்வளவு பெரிய நஷ்டம் ஏற்படுகிறது என்பதை இவர்களால் புரிந்து கொள்ள முடிவதில்லை!**

தேவனுடைய பிரசன்னம் நிறைந்த அந்த உச்சித ஸ்தலத்தில் எண்ணி முடியாத ஆசீர்வாதங்கள் அவர்களுக்காக காத்திருப்பதை இவர்கள் அறியாமலிருக்கிறார்களே என்ற வேதனை தேவனுக்கும், இன்று வரை உள்ள உத்தம தேவ தாசர்களுக்கும் பெரும் பாரமாய் இருக்கிறது! கர்த்தர் இரக்கம் செய்து இந்த துயர நிலையை மாற்றுவாராக!

*- Mrs.சார்லஸ் கௌவ்மென்*

---

## 'வருடம் முழுதும் மகிழ்ச்சிக்கு' ஒரே ஒரு தீர்மானம்!

*ஆசீர்வாதத்தின் தடையை அகற்றுங்கள்*

நம்முடைய கடந்த கால வாழ்க்கையை வேதம் குறிப்பிடும்போது "மற்றவர்களால் நாம் பகைக்கப்பட்டு, நாமும் மற்றவர்களை பகைக்கிறவர்களாய் இருந்தோம்" என தீத்து 3:3 தெளிவாய் கூறுகிறது. இப்படித்தான் அவபக்தியான யாவருமே வாழ்ந்தார்கள், அந்நாட்களில் நாமும் அவர்களைப்போலவேதான் வாழ்ந்தோம்: "மற்றவர்கள் என்னை பகைக்கிறார்கள், நானும் அவர்களைப் பகைக்கிறேன்!" என்ற பரிதாபமான நிலை. இன்னும் அதிகமாய், மனந்திரும்பிய திரளான விசுவாசிகள்கூட தொடர்ச்சியாய் கைகொண்டு வரும் ஓர் கொடிய பாவம் உண்டு..... அதுஎன்னவெனில், "மற்றவர்களை தீமையாய் விமர்சிக்கும்" (Criticising) செயலேயாகும்.

> **"பிறரை பகைப்பதை" நிறுத்திவிட்ட விசுவாசிகள், "பிறரை தீமையாய் விமர்சிக்கும் தீய செயலை தொடர்ந்து செய்வது பரிதாபமல்லவா?".**

*தீத்து 3:3 கூறிய பிரமாணத்தின்படி 'பகைக்கப்பட்டு பகைத்தோம்'. இப்போதோ, மற்றவர்களை தீமையாய் விமர்சித்து, நாமும் தீமையாய் விமர்சிக்கப்படுகிறோம்! என்ற அதே பிரமாணத்திற்குள் சிறைப்பட்டுள்ளோம்! இதுபோன்ற நிலையை, வேதப்பூர்வமாய் நீங்கள் அறிந்து விளங்கிக் கொள்வது நல்லது: "பிறரை பகைப்பதற்கும், பிறரை தீமையாய் விமர்சிப்பதற்கும்" இடையில் எந்தவொரு வித்தியாசமும் இல்லை என்பதேயாகும். இந்த இரண்டு பாவங்களுமே* **'ஒரே பிதாவாகிய பிசாசிடமிருந்தே'** *புறப்பட்டு வருகிறது!*

*பிறருடைய சுபாவங்களை உங்களின் ஓரக்கண்ணால் மறைவாக கவனித்து கவனித்துப் பார்க்கும் சமயங்களில் எல்லாம், அந்த நபரைக் குறித்த உங்களின் சொந்த தீமையான அபிப்பிராயங்கள் புற்றுநோய் கிருமி போல உங்களுக்குள் வளர்ந்து கொண்டே வரும்! இவ்வாறு 'மறைந்து வளர்ந்த' தீய அபிப்பிராயங்கள் இன்னமும் உள்ளே வைத்திருக்க முடியாமல் அந்த நபரைக் குறித்து ஒருநாள் வெடித்து வந்துவிடும்! அவ்வாறு வெளிப்பட்ட பாவம் 'பிசாசின் மொத்த ரூபம்' என்றே இப்போது கூறலாம். இங்குதான் பிசாசு உங்களுக்கு எஜமானாய் மாறி, அந்தப் பாவத்திற்கு நீங்கள் அடிமையாகவே மாறி விடுகிறீர்கள். தேவனுடைய இந்த வெளிச்சத்தைப் பெறாமலே, ஒரு ஆண்டு முழுவதும் வாழ்ந்துவிட்ட சகோதர சகோதரிகளின் நிலைமை மிகவும் பரிதாபம் என்றே கூறலாம்.*

*இவ்விஷயத்தில் நீங்கள் தேவனுடைய வெளிச்சத்தை விரும்புகிறவர்களாயிருந்தால்* **'இரண்டு வேத வாக்கியங்கள்'** *உங்கள் ஞாபகத்தில் எப்போதும் நிலைத்திருக்க வேண்டும். பகலானாலும் இரவானாலும் இந்த வசனங்களை நீங்கள் தெய்வ பயத்துடன் கைகொண்டு வாழ்ந்தால், புத்தியீனத்திலிருந்து விலகி ஞானவான்களாய் மாறி விட முடியும்!*

*1. "நியாயப்பிரமாணம் இல்லாவிட்டால், மீறுதலும் இல்லை" என்ற (ரோமர் 4:15) வசனமேயாகும். 2. "நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்!" (1யோவான் 3:4). ஒருவர் நியாயப்பிரமாணத்தை தனக்கென்று பெற்றுவிட்டால், பின்பு அதை மீறுவது பாவமாகிவிடும். ஆனால் பிரமாணமே அவனுக்குத் தெரியாதபட்சத்தில், மீறுதலும் அவனுக்கு இல்லை. ஆவியின் எல்லா பிரமாணங்களும் தேவனுக்குள் அடங்கியிருக்கிறது! நாம் கிறிஸ்தவ ஜீவியத்தில் வளர்ந்து வர வர இந்தப் பிரமாணங்களை நம் இருதயத்திலும், நம் மனதிலும் தேவன் ஒன்றன்பின் ஒன்றாய் எழுதி வைப்பார்! (எபி.8:10). இவ்வாறு அந்தப் பிரமாணங்களை தேவன் இன்னமும் உங்கள் இருதயங்களிலும், உங்கள்*

மனதிலும் எழுதியிருக்காத பட்சத்தில் 'பிரமாணங்களை நீங்கள் மீறியவர் என்ற' பாவம் ஏற்படாது! ஏனென்றால், "பிரமாணம் இல்லாத இடத்தில், மீறுதலும் இல்லை!".

நீங்கள் ஒரு குறிப்பிட்ட தேவனுடைய பிரமாணத்திற்கு, முற்றிலும் விரோதமாக நீங்கள் யாதொன்றைச் செய்து, அந்தப் பிரமாணம் இன்னும் உங்கள் இருதயத்திலும் மனதிலும் எழுதப்படாதிருந்தால், நீங்கள் தேவனுக்கு முன்பாக முற்றிலும் குற்றமற்றவர்! உங்களைச் சுற்றியுள்ள மற்ற அனைவரும் 'உங்களை குற்றமுள்ளவர்' என கூறினாலும், ரோமர் 4:15 வேத ஆதாரத்தின்படி நீங்கள் குற்றமற்றவர்கள்!

> **"இந்த முழு அண்ட சராசரத்திலும் தேவன் ஒருவர் மாத்திரமே பிழையற்ற நீதிபதி! அவர் உங்களைப் பார்த்து "நீங்கள் குற்றமற்றவர்" என கூறிவிட்டால் நீங்கள் மெய்யாகவே குற்றமற்றவர்தான். ஏனெனில், தேவனைக் காட்டிலும் மிஞ்சிய வேறொரு நீதிமன்றம் வேறொன்றுமில்லை!**

அதே சமயத்தில், நீங்கள் யாரை குற்றமுள்ளவர் என தவறான அபிப்பிராயம் வைத்தீர்களோ, அவர்களை தேவன் 'அறியாத களங்கமற்றவர்' என்றே தேவன் அறிவிப்பார் என்பதை நீங்கள் மனதில் வைத்துக்கொள்ளுங்கள். எப்படியெனில், 'நீங்கள் குற்றமற்றவர்' என்ற உண்மையில் நீங்கள் மகிழ்ச்சியாய் இருந்திட முடியும். இதே சத்தியத்தின் மகிழ்ச்சியில், முன்பு நீங்கள் யாரையெல்லாம் குற்றமுள்ளவர் என மனிதல் வைத்தீர்களோ அவர்கள் அனைவரும் "அறியாத - குற்றமில்லாதவர்" என அறிவித்திட நீங்கள் மனதுடையவர்களாய் இல்லையென்றால், உங்களை நீங்களே வஞ்சித்துக்கொண்டீர்கள் என்பதை அறியுங்கள்! நான் சத்தியத்தை அறிந்து கொண்டேன் என நீங்கள் கூறியதும், மாறுபாடு கொண்டதாகும்!

> **"ஆனால், ஒருவர் தன் இருதயத்தில் ஏற்கனவே எழுதப்பட்ட பிரமாணத்தை ஒரு சூழ்நிலையில் மீறுவார் என்றால் அவர் நிச்சயமாய் பாவம் செய்தவராய் மாறுகிறார் என்பதில் சந்தேகமே இல்லை!**

இந்த ஒரே ஒரு ஆவிக்குரிய கடின ஆகாரத்தை மெதுவாக மென்று சுவைத்து ஜீரணித்து விடுங்கள். அப்போது இந்த புதிய ஆண்டு உங்கள் ஜீவிய திராட்ச தோட்டத்தில் ஏராளமான கனிகளை கொடுத்து விடும் என்பதை முன்கூட்டியே அறிவித்து உங்கள் வாழ்த்துகிறேன்!

*- எலியாஸ் அஸ்லாக்சன்*

## ஊழிய எழுப்புதலோடு ஜீவிய எழுப்புதலும் வேண்டும்!

*'சுவிசேஷ கட்டளை' சபையில் கனமடைய வேண்டும்*

ஆண்டவர் இயேசுவின் 'சுவிசேஷ கட்டளை' இன்று வெகுவாய் சபைகளில் புறக்கணிக்கப்பட்டுள்ளது! 1) நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்.... 2) இயேசுவின் கற்பனைகளை கைக்கொள்ளும்படி, உபதேசியுங்கள்.... என்ற பங்கே 'சுவிசேஷ கட்டளையாக' நாம் யாவரும் பெற்றிருக்கிறோம்! ஆரம்பநிலை விசுவாசிகூட, **எல்லோருக்கும் 'சுவிசேஷம் அறிவிக்க வேண்டும்'** என்பதே முதல் பங்கு! நாம் **கற்பனைகளை கைக்கொண்டு,** மற்றவர்களையும் கைக்கொண்டு வாழச்செய்வது, இரண்டாவது பங்காகும்!

தேவ வசனம் 'விதைக்கு' ஒப்பிடப்பட்டிருப்பதை நாம் அறிவோம். பொதுவாக விதையை விதைப்பவர்கள் யாராயிருந் தாலும் பலன் ஒன்றேதான். ஆனால்.... ஆவிக்குரிய ரீதியில் இவ்வாறு சம்பவிப்பதில்லை! "ஒரே செய்தியே" ஜனங்களுக்குப் பிரசங்கிக்கப்பட்டாலும், அதைப் பிரசங்கித்த மனிதர்களில் ஒருவர் தேவபக்தி உடையவராயும், மற்றவர் வசனத்தை கைக் கொள்ளாதவராயும் இருந்தால், அவரவருடைய வாழ்க்கையின் அடிப்படையைக்கொண்டுதான் மனந்திரும்புகிறவர்களுடைய ஜீவிய தரமும் வெவ்வேறாய் அமைந்துவிடுகிறது! உண்மைதான், பிரசங்கித்தவர்களின் வாழ்க்கைத் தரத்தின் அடிப்படையிலேயே பலனும் கிட்டுகிறது!!

லோக சிந்தையில் சிக்குண்டு, ஆவிக்குரிய தன்மையை இழந்த ஒரு சபையிலுள்ள ஊழியர்கள், கடல் கடந்து சென்று வேறு பாஷைக்காரரிடத்திலும், வேறு கலாச்சாரம் கொண்ட ஜனங்களிடத்திலும், இவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தாலும், பிரசங்கித்தவர்களின் அந்த 'கீழ்த்தரமான' ஜீவிய தரத்தின்படிதான் இவர்கள் ஒன்றை உருவாக்கிட முடியும்!

> "**பார்த்தீர்களா, வெறும் வார்த்தை மாத்திரமல்ல..... அதை கைக்கொண்டு பிரசங்கித்தவர்களின் ஆவிக்குரிய குணாதிசயம் மாத்திரமே பலனை தீர்மானம் செய்கிறது!**

ஒரு சபை, தன்னிலிருக்கும் செடியின் ஜீவியம் எப்படியோ, அதை அப்படியே தன் கிளைக்கு ஒட்ட வைத்திட மாத்திரமல்லாமல், வேறு எதுவும் செய்திட முடியாது! தன் தேசத்தில் இவர்கள் வைத்திருந்த சபையின் தரத்தை மாத்திரமே வேறு தேசத்திலும் இவர்கள் நட்டு

*வைத்திட முடியும்! 'ஜீவன்' உள்ள யாதொன்றின் மீதும் தேவன் பதித்து வைத்துள்ள மாறாத சூத்திரம் யாதெனில்: "தன் தன் இனம் தன் தன் இனத்தை மாத்திரமே உற்பத்தி செய்திட முடியும்!" என்பதுதான்.*

*உலகமெங்கும் சென்று சுவிசேஷத்தை பிரசங்கிக்க வேண்டியது சபையின் தலையாய கடமை என கூறுவது சரிதான்! அதேசமயத்தில், சுவிசேஷத்தை பிறருக்கு பிரசங்கிக்கச் செல்பவர்கள், ஆவிக்குரிய தகுதியுடைய வாழ்க்கையைப் பெற்றிருக்க வேண்டும் என்பதும் மிக அவசியம். நம் ஆண்டவர் "நீங்கள் போங்கள்...." என கொடுத்த சுவிசேஷ கட்டளைக்கு ஒப்பாக, "நீங்கள் காத்திருங்கள்...." என்றும் கட்டளையிட்டுள்ளார்.*

**"வேதம் நமக்குத் தெளிவாய் காட்டுகிறபடி, புறப்பட்டுப் போகிற நாம் "பரிசுத்தாவியின் வல்லமை" பெற்றே போக வேண்டும்!**

*இயேசுவின் சீஷர்கள் பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்பாகவே மிஷனெரிகளாய் புறப்பட்டுச் சென்றிருந்தால் "ஆவிக்குரிய பேரழிவுதான்" ஏற்பட்டிருக்கும்! ஏனெனில், இவர்கள் தங்களைப் போன்ற வாழ்க்கையைத்தான், தாங்கள் பிரசங்கித்தவர்களுக்குத் தந்திருக்க முடியும்.... அதன் விளைவாய், அன்று தொடங்கி இன்று வரை பெரும்பாலான கிறிஸ்தவத்தின் முழு சரித்திரம் சீரழிந்த வாழ்க்கையாகவே அமைந்திருக்கிறது! பெலனற்ற, தரம் குறைந்த கிறிஸ்தவத்தை புறஜாதி தேசத்திற்குச் சென்று, பிரசங்கிப்பது ஒன்றும், கிறிஸ்துவின் சுவிசேஷ கட்டளையை நிறைவேற்றி விட்டதாக ஒருபோதும் அர்த்தமாகாது! நம் ஆண்டவர் இயேசு கடிந்து உரைத்த "ஒருவனை உங்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும், பூமியையும் சுற்றித் திரிகிறீர்கள். அவன் உங்கள் மார்க்கத்தானாகும் போதோ, அவனை (உங்களைப்போலவே) உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள்" என்ற மத்தேயு 23:15-ம் வசனம், என் ஆத்துமாவை வெகுவாய் கண்டித்துப் போதித்த வசனமாகும்!*

*ஆனால் இன்றைய சுவிசேஷ சபைகளோ, இயேசு கற்பித்த புதிய உடன்படிக்கையின் ஜீவிய தரத்திலிருந்து வெகு தொலைவில் நிற்பது சொல்லொண்ணா துயரத்தையே நமக்குத் தருகிறது.*

*இன்று சபை தேய்ந்து, தன் ஜீவியத்தோடு உலகத்தையும் ஏற்றுக்கொள்வது சாதாரண சகஜமாகிவிட்டது! ஆகவேதான், எளிய சுவிசேஷம் அறிவிக்கும் கடமையைக்கூட செயல்படுத்தாமல் தேங்கி கிடக்கிறார்கள்!*

“ **ஆவிக்குரிய சுவிசேஷ தன்மையிலிருந்து சபை விலகி ‘சமூக சேவை’ என்னும் மார்க்க போர்வையில் பின்னடைந்துவிட்டது. எனவேதான், இன்று சபையில் பரிசுத்தவான்கள் வளர்ந்து வரவில்லை!**

*இன்று சபையில் உயர்ந்திருக்கும் மாதிரிகள் “செழித்த வியாபாரிகள்” “திறமையான கிரிகெட் வீரர்கள்” “சினிமா பாணி கொண்ட சௌந்தரியவான்கள்” ..... அவ்வளவுதான்! அதாவது, உயர்ந்த அரசு வேலை, பணம் படைத்தவர்கள், தோற்றத்தில் வசீகரம் போன்றவர்களே, ஊழிய மேடையை அலங்கரிக்கிறார்கள். இந்த இலட்சணத்தில் இவர்கள் மார்க்க சம்பந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறார்கள்.... அதையும் இன்றைய நாகரீக விளம்பர உத்திகளோடு செயலாற்றுகிறார்கள். இவ்வாறு,* **உலகத்தை மையமாய்** *கொண்டு சபை மாறி விட்டபடியால், சபையிலுள்ள அநேக வீடுகள் ‘சினிமா கொட்டகைகளாய்’ மாறி விட்டன! இன்று சபைகளிலிருந்து வெளியிடப்படும் பத்திரிக்கைகள், புத்தகங்கள் ஆழமற்றதாய்,* **பரிசுத்தத்தின் அக்கினியை** *தங்கள் புத்தகங்களின் விளிம்பின் ஓரத்திற்கு தள்ளி ஒதுக்கி வைத்துக்கொண்டார்கள். இத்தனை கேடாய் நடந்து கொண்டிருந்தாலும்,* **சபையிலிருக்கும் ஜனங்களோ அதைக் கண்டும் காணாததுபோலவே அலட்சியப்போக்கில் வாழ்கிறார்கள்!**

*வெகு சீக்கிரமாய்.... குறைந்தபட்சம் இன்னும் பத்து வருடங்களுக்குள்ளாகவே கிறிஸ்தவம் மறுமலர்ச்சி கொண்டு, ஆர்த்தெழ வேண்டும்! அவ்வாறு சம்பவிக்கவில்லையென்றால், “மெய் கிறிஸ்தவமே” நம் தேசத்தில் இல்லாமல் போய்விடும்! அரைகுறை, நாற்றமெடுத்த ஜீவியம் கொண்ட கிறிஸ்தவர்களின் சதவீதம் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டேபோவதில் ஒரு பிரயோஜனமுமில்லை! நமக்குத் தேவையாய் இருப்பதெல்லாம்.... ஜீவிய எழுப்புதலும், ஊழிய எழுப்புதலும் இணைந்து முரசொலிக்கும் சபைகளேயாகும்!*

*- A.W.டோசர்*

---

## அவிசுவாசமும், அகந்தையுமே ‘தெய்வீக சுகம் பெற’ தடை!

*தாழ்மையான விசுவாசமே கிருபையின் வாசல்*

*பல தரப்பட்ட அனுபவங்களில், நான் உணர்ந்து அனுபவித்தது என்னவென்றால்* **“ஒரு மனிதனின் பூரண விடுதலையை”** *கர்த்தர் கனம் செய்கிறார் என்பதேயாகும். ஆகிலும் கர்த்தர் விரும்பும் இந்த உண்மைக்கு, அவனுடைய உடன்பாட்டை அல்லது சம்மதத்தை அவர் எதிர்பார்க்கிறார்! எப்படியெனில் நான் ஒருவரைப்பார்த்து ‘இயேசுவின் நாமத்தில் சுகமடைவாயாக’ என்றோ, அல்லது ‘உங்களுக்கு*

ஏற்பட்ட பிரச்சனை தீர்வதாக' என்றோ, நான் கூறும்போது, அந்த பாதிக்கப்பட்ட நபர், நான் கூறியதை யாதொரு எதிர்ப்புமின்றி மனப்பூர்வமாய் ஏற்றுக்கொண்டால், அவருக்கு கூறிய விசுவாச வார்த்தைகள் நிச்சயமாய் பலன்தரும்! ஆம் அவர்கள் பூரண சுகமடைவார்கள்! ஆனால் அவர்கள் சந்தேகப்பட்டாலோ அல்லது சுகமாகும் கட்டளையை எதிர்த்து நின்றால் என்னவாகும்? அல்லது சாக்கு போக்கு கூறும் தொனியில் "கர்த்தருக்கு சித்தமானால் நான் சுகமாவேன், அவருக்கு சித்தமில்லையென்றால் 'அதுவரை' நான் சுகம்பெற மாட்டேன்" என்றும் கூறுகிறார்களே? இன்னும் அநேகர் "நான் இனி ஒருக்காலும் சுகமடைய முடியாது! என்னுடைய நிலைமை இவ்வாறுதான் இருக்கும்" என தங்களின் வேதனையின் மிகுதியில் கூறுகிறார்களே? **இதுபோன்ற அவிசுவாச நிலையில் கர்த்தருடைய வார்த்தைக்கு எந்த வல்லமையும் வெளிப்படுவதில்லை!**

இக்காலங்களில், பிறருக்கு சுகமளிக்கும் தெய்வ வல்லமை 'கர்த்தரின் ஈவாக' எனக்குள் தங்கியிருப்பதைக் கண்டேன்! ஒருசமயம் ஆண்டவராகிய இயேசு கூறிய வார்த்தை எனக்கு அனுபவமாய் மாறியது: ஒரு ஸ்திரீ, 12 வருடங்களாய் 'இரத்தப்பெருக்கு' நோயினால் பாதிக்கப்பட்டு இயேசுவினுடைய வஸ்திரத்தின் ஓரத்தை பின்னாக வந்து தொட்டாள். உடனே ஆண்டவர் இயேசு 'என்னைத் தொட்டது யார்?' எனக் கேட்டார். அதற்கு அப்போஸ்தலர்கள் "ஐயரே, திரளான ஜனங்கள் உம்மைச் சூழ்ந்து நெருக்கிக்கொண்டிருக்கிறார்களே, என்னைத் தொட்டது யார் என்று எப்படிக் கேட்கிறீர்?" என்றார்கள். அதற்கு இயேசு கூறிய பதில் மிகவும் முக்கியமானது: "என்னிலிருந்து வல்லமை புறப்பட்டதை அறிந்திருக்கிறேன்" எனக் கூறினார் (லூக்கா.8:44,45,46).

நான் முன்பு குறிப்பிட்ட அற்புத சுகத்தில், 'சுகமாக்கும் வல்லமை' அவருடைய வார்த்தையின் விசுவாசத்தைக்கொண்டே என் மூலமாய் மற்றவர்களுக்குச் சென்றதை நான் அனுபவபூர்வமாக உணர்ந்தேன்.

> “ **ஆகிலும், சுகமாக்கும் தெய்வ வல்லமை யாருக்குச் சென்று சுகமாக்க வேண்டுமோ 'அந்த நபர்கள்' அதை ஏற்றுக்கொள்ள தயங்கும் பட்சத்தில், பரத்தின் சுகமாக்கும் வல்லமை செயலற்றுப்போவதை நான் உணர்ந்தேன்.**

இதுவே ஆண்டவருக்கு மிகுந்த துயரம். பிறருக்காக, அதே போன்ற துயரத்தை நானும் அனுபவித்தேன்! திவ்ய வல்லமையை பெற்றுக்கொள்ளாத அந்த நபர்களிடம் எனக்கு வருத்தம் ஏற்பட்டது

உண்மைதான்! ஆனால் திவ்ய வல்லமையை எதிர்த்து மட்டுப்படுத்தாத யாவருக்கும் திவ்ய வல்லமை பூரண சுகம் கொடுத்ததை நான் கண்டேன்! **சுகமாக்கும் திவ்ய வல்லமை 'உயிரற்ற சடலத்தையும்' உயிர்ப்பிக்கும்!** இருந்தபோதிலும், ஒரு நபரிடமுள்ள 'சிறிய அவிசுவாசம்கூட' அந்த தெய்வீக வல்லமையை செயலிழக்கச்செய்கிறது.

எனக்குத் தெரிந்த ஒரு நல்ல கன்னியாஸ்திரீயை நான் அறிவேன். அந்த கன்னியாஸ்திரீ 'பலாத்கார தொந்தரவினால்' மனச்சோர்வும், அதிக சுகவீனமும் அடைந்தார்கள். தொய்ந்து போன தன் ஆவிக்குரிய நிலையை ஸ்திரப்படுத்திக்கொள்ள, தனக்கு உதவி தேடி, சிறந்த ஆவிக்குரிய நபர் என எண்ணிக்கொண்ட ஒரு முதிர்ந்த கன்னியாஸ்திரீயிடம் தன்னுடைய நிலையை எடுத்துக்கூறினார்கள். ஆனால், உதவிக்கு பதிலாய் இந்த இளைய கன்னியாஸ்திரீயை மிகுதியான மனச்சோர்வடையும்படி செய்துவிட்டார்கள். மிகுந்த கோபத்துடன், பாதிக்கப்பட்ட கன்னியாஸ்திரீயிடம் "பலாத்கார நிகழ்ச்சி அசுசியானது, இனி என் வாசல்பக்கம் நீ வரவே கூடாது" என துரத்தி விட்டார்கள்.

யாதொரு வழியும் தெரியாமல் துவண்டு போன அந்த கன்னியாஸ்திரீ, வேதனையோடு என்னிடம் வந்தார்கள். நான் அவர்களை ஏற்றுக்கொண்டு ஆறுதல் செய்த பின்பு, கர்த்தர் உடனடியாக அவளின் வேதனைகளை நீக்கினார்! நான் மிகுந்த மனபாரத்துடன் "சகோதரியே, உங்களை இத்தனை இழிவுசெய்து புறக்கணித்த அந்த மூத்த கன்னியாஸ்திரீக்கு, உங்களைவிட மோசமான நிலை 'அவர்களுக்கே' ஏற்பட்டு தண்டிக்கப்படுவார்கள், என மனம் வெதும்பி கூறினேன். ஒருநாள் கழித்து அந்த மூத்த கன்னியாஸ்திரீ என்னிடத்தில் வந்து, "சுகம் பெற்றுச் சென்ற இளைய கன்னியாஸ்திரீயை" கோடிட்டு காண்பித்து "இவள் எவ்வளவு மோசமானவள்! இவள் சென்ற பலாத்கார பாதையை நான் அருவருக்கிறேன்! என்னுடைய பரிசுத்த நிலையை கண்டு மகிழ்ச்சியடைகிறேன்" என்றெல்லாம் என்னிடம் கூறினார்கள்.

> **"மேலும் கூறும்போது "இவளின் இழிநிலையை ஒப்பிடும்போது, எனக்கு எந்த கெட்ட பாலியல் சிந்தையும் ஏற்பட்டதில்லை!" எனக்கூறி பெருமையடைந்தார்கள்.**

இவைகளை கேட்ட நான் "அன்புள்ள மூத்த சகோதரி, நான் உங்கள் மீதுகொண்ட நட்பை வைத்து கூறிக்கொள்ள விரும்புவதெல்லாம், உங்களிடம் மனம் வெதும்பி உதவிகேட்ட அந்த இளைய சகோதரியின் 'அதே அவலநிலை' உங்களுக்கும் ஏற்படுமென்றே அஞ்சுகிறேன்.

*இவ்வாறு நான் கூறியதைக்கேட்டு ஆத்திரமடைந்த அந்த மூத்த கன்னியாஸ்திரீ "நீ கூறிய அவலநிலை எனக்கல்ல உனக்குத்தான் சீக்கிரத்தில் சம்பவிக்கும்" என கோபமாய் கூறினார்கள். நானோ, நிதானமான உறுதியுடன் "என் சொந்த விருப்பத்தின்படி நான் எந்த வேண்டுதல் செய்தாலும் கர்த்தர் செவிகொடுக்கமாட்டார் என்பதை நான் அறிவேன்! ஆகவே, கர்த்தர் தான் செய்ய விரும்பியதைச் செய்வாராக" என கூறிச் சென்றேன்.*

*வருத்தம் என்னவென்றால், அன்று இரவிலேயே அந்த மூத்த சகோதரி பலாத்கார கொடூர சூழ்நிலையில் சிக்கினார்கள். அப்போதுதான் அந்த மூத்த சகோதரி தன்னுடைய தவறை அறிந்து உணர்வடைந்தார்கள். மேலும்* **"அவருடைய கிருபை இல்லையென்றால் நான் ஒன்றுமில்லை" என மனம் வருந்தி அறிக்கையிட்டார்கள்.** *ஒரு பிறவிக்குருடனின் கண்ணில் கர்த்தர் சேறு பூசியதைப்போல இந்த மூத்த சகோதரிக்கு நிகழ்ச்சி நடந்தது! சேறு கீழே விழுந்ததும் கண்பார்வை பெற்றதுபோல் அந்த மூத்த கன்னியாஸ்திரீயின் மனக்கண்கள் 'சேறு போன்ற' வன்செயலால் திறக்கப்பட்டது! அதுமுதல் வீண் பெருமையை ஒழித்து, கர்த்தருடைய கிருபையை போற்றும் சகோதரியாய் மாறிவிட்டார்கள்! அல்லேலூயா.*

*- மேடம் குயான்*

---

## ஆலயத்தின் மீது கொண்டிருந்த இயேசுவின் வைராக்கியம்!

*'தெய்வ வைராக்கியமின்றி' சபையை காத்திட முடியாது*

*நமது கோபத்துக்கும் ஆண்டவர் இயேசுவின் கோபத்துக்கும் வித்தியாசம் உண்டு! நமது கோபம், நமது பலவீனத்தைக் காட்டுகிறது. அது, பொறாமையாலும் பெருமையாலும் உண்டாகிறது! அது, மற்றவர்கள் நமக்குச் செய்யும் தீமையைச் சகிக்கக்கூடாமல் வெளிப்படுகிறது! அது தன்னயமும் பழிவாங்கும் சுபாவமுமுள்ளது. நமது கோபத்தில் பாவமுண்டு! நமது கோபத்தில் தீமையுண்டு! நமது கோபத்தில் கசப்பும் பிரிவினையும் உண்டு! நமது கோபத்தில் மூர்க்கமும் புத்தி தடுமாற்றமும் உண்டு! அதுமாத்திரமல்ல, நமது கோபத்திற்குப் பின் 'வேதனை' உண்டு! நமது கோபத்தில் நமக்கே சேதமுண்டு! நமது கோபத்தில் நமக்கே கஷ்டமுண்டு!* **கோபப்பட அவசியமென்றால் அது, இயேசுவைப்போல தேவ வைராக்கியமாய் இருந்தால் மாத்திரமே நல்லது!**

*ஆண்டவர், தேவ ஆலயத்தில் 'காசுக்காரர்களை' விரட்டிய செயலை பார்த்தவர்களுக்கும் கேட்டவர்களுக்கும் எப்படியிருந்திருக்கும்? ஒரே நிமிஷத்தில் அந்த சேதி எங்கும் பரவினது: "கலிலேயாவிலிருந்து வந்த*

ஒரு மனுஷன், ஆலயத்தில் இவ்வளவு அதிகாரம் செலுத்துவதென்ன? அதிகாரிகள் அவனைச் சும்மாவிடுவார்களா? அவர்களின் அதிகாரம் பெற்று அமைத்த கடைகளைக் கொட்டிக் கவிழ்ப்பதென்ன? திரளான ஆடுகளையும் மாடுகளையும் அடித்துத் துரத்துவதென்ன? நாணயக்குவியல்கள் நாலாபக்கமும் உருண்டோடுவதென்ன? இதுவரை இப்படிச் செய்யத் துணிந்தவன் ஒருவனுமில்லையே! இது என்னமாய் முடியுமோவென்று" ஜனங்கள் கும்பல் கும்பலாக நின்று பிரமிப்போடு பேசிக்கொள்ளுகிறார்கள்!

**அநேகருக்கு, இயேசு நிகழ்த்திய இந்த ஆலயச் சுத்திகரிப்பின் அவசியம் விளங்கவில்லை!** இத்தீய வழக்கத்தை வருஷா வருஷம் கண்டு, அது அவர்களுக்குச் சாதாரணமாய் போய்விட்டது! ஏழைகளும் பக்தியுள்ள மற்றவர்களும், இன்று நடந்ததே சரி என்றே பேசிக்கொள்ளுகிறார்கள்.

தூரதேசங்களிலிருந்து வந்த முதியோர்: எங்கள் நாட்களில் இப்படிப்பட்ட அநியாயமான வியாபார கடைகள் இருந்ததில்லை! இப்போது இவைகளை சொல்லப்போனால் அதிகாரிகள் கோபப்படுவார்கள் என்று தங்களுக்குள்ளேயே மறைவாய் பேசிக்கொள்ளுகிறார்கள்!

ஆனால், சம்பவித்ததைக் கண்ட ஆலய அதிகாரிகளுக்கோ, வந்த கோபம் கொஞ்சமல்ல! பரிசேயர், தங்களுக்கு அவமானம் வந்துவிட்டதாகவே நினைத்தார்கள். 'ஆசாரிமார்' தங்கள் ஆதாயத்துக்கு ஆபத்து வந்ததெனக் கலங்கினார்கள்! ஆலயப் போர்ச்சேவகர் "அவரைப் பிடியுங்கள்" என்ற கட்டளைக்காகக் காத்துக்கொண்டிருந்தார்கள்!

ஆனாலும், அவரை எதிர்க்கவோ, பிடிக்கவோ, தண்டிக்கவோ ஒருவனுக்கும் தைரியம் வரவில்லை! பண்டிகைக்கு வந்த திரள் ஜனங்கள், ஆளுக்கு ஒருபிடி மண்ணைவாரி அவர்மேல் போட்டாலும், அவர் புதைந்துபோவார் என்பது நிச்சயம்! அப்படியிருந்தும் ஒருவனாகிலும், இயேசுவை கிட்ட நெருங்க முடியவில்லை!

அவர்கள் அவரைச் சும்மாவிட்டதற்குக் காரணமென்ன?:

> "**பாவத்துக்குத் தைரியமில்லை என்பதே மெய்! தீர்க்கதரிசி ஏழையாயிருந்தபோதிலும், ஆசாரியர்களும் இராஜாக்களும் அவனுக்குமுன் நிற்க முடியவில்லை! தாவீது நாத்தானுக்கு அடங்கினதேன்? ஆகாப் எலியாவுக்குப் பயந்ததேன்? ஏரோது யோவானுக்கு அஞ்சினதேன்? பாவம், பரிசுத்தத்திற்குமுன் நடுங்க வேண்டும்! தீர்க்கரிதரிசியை ஒருவன் கொன்றாலும், 'அவனைப்பற்றிய பயமோ' அந்த தீர்க்கதரிசி செத்தாலும் அவர்களைவிட்டு நீங்காது!**

ஜனங்களுடைய பிரயோஜனத்திற்காகவே கடைகள் வைத்திருக்கிறோமென்று அதிகாரிகள் தங்களைத் தேற்றிக் கொண்டிருந்தாலும், தாங்கள் செய்துவந்த அநியாயங்களை அவர்கள் மறந்தவர்கள் அல்ல! அவர்களின் கள்ள நம்பிக்கை இந்த சமயத்தில் நிர்மூலமானது! அவர்கள் மனச்சாட்சி அவர்களைக் குற்றப்படுத்தினது! **அதிகாரிகளுக்கும், பரிசேயருக்கும் தாங்கள் செய்து வந்தது குற்றமெனத்தெரியும்!** அவர்களின் பாவமே அவர்களைக் கண்டுபிடித்தது!

உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை! ஆகவே, இந்த மார்க்க தலைவர்கள் “உலக சிநேகம்” வைத்திருந்தபடியால், தேவனற்றவர்களாகவே ஜீவித்தனர்! ‘சபையை’ வைத்து தங்களுக்கு லாபம் தேடும் மார்க்கவாதிகளுக்கு ‘தேவ ஆலயம்’ என்ற பயபக்தி இழந்தே காணப்படுகிறார்கள்! இந்த வியாபாரம் மார்க்க அதிகாரிகளுக்கும் பரிசேயருக்கும் மிகுந்த இலாபத்தைக் கொடுத்தபோதிலும், ஜனங்களில் அநேகருக்கு மிகுந்த வெறுப்பையும் துக்கத்தையும் கொடுத்தது! ஆண்டவர் இப்படிச் செய்தபோது, அவர்கள் அவரிடத்தில் அனுதாபமுற்றுச் சந்தோஷித்தார்கள். சந்தர்ப்பம் இப்படியிருந்தபடியால், அதிகாரிகள் அவரைப்பிடிக்க துணியவில்லை!

> *எல்லாவற்றிற்கும் மேலாக, அச்சமயத்தில் விளங்கின அவரது அமைதியான திருமுகச்சாயலும், கண்களில் நிறைந்திருந்த பக்தி பார்வையும் எல்லாருக்குள்ளும் பயத்தை உண்டாக்கினதால், அவரை எதிர்க்க ஒருவனும் துணியவில்லை! சமயாசமயங்களில் விளங்கின அவரின் உறுதிபூண்ட திருமுகத்தோற்றம், சத்துருக்களைப் பின்வாங்கச் செய்ததுண்டு! நாசரேத்தூரார் கைக்குத் தப்பினதும், ஆலயத்தில் ஒரு சமயம் பிடிக்கவந்த சேவகர் வந்த வழி திரும்பினதும், கடைசியாக தோட்டத்திற்கு வந்த சேனை பின்னாக விழுந்ததும், அவரின் திருமுக அமைதி தோற்றமே!*

இவர் நாலுபேரைப்போல் பண்டிகைக்கு வந்த ஒரு ஆள் அல்ல, எருசலேம் நகரத்தின் மகாராஜன் இவர்! எருசலேம் தேவாலயத்தின் ஆண்டவர் இவர்! இஸ்ரவேலைத் தேடிவந்த மீட்பர் இவர்! ஆதிமுதல் இஸ்ரவேலை ஆண்டு நடத்தின அதிசயன் இவர்!

முன்னே மல்கியா முன்னுரைத்த மகிமையின் கர்த்தர் இவர்! இவர் தமது ஆலயத்துக்காகக் கவலைப்பட அதிகாரமில்லையென்றால், வேறே எவனுக்கு அதிகாரமுண்டு? இன்றும், தேவ சபையை பாதுகாத்திட “அவரைப்போன்ற வைராக்கியமே” அதிகமாய் தேவை! கர்த்தரின் நாமம் மகிமைப்படுவதாக!

- பரமானந்தம் ஐயர்

## வேத பூர்வமாய், நாம் சபை கூடிவருவது எப்படி?

*கிறிஸ்துவை மையமாய்! பிறரின் பக்திவிருத்திக்காய்! கூடும் சபை*

சபை கூடுதலின் எல்லா அடிப்படை காரியங்களுக்கும் தெளிவான விடையை சத்திய வேதம் நமக்கு வழங்கி இருக்கிறது:

1. எல்லா சபை கூடுகையும் 'கர்த்தருடைய நாமத்தில்' கூடி வர வேண்டும்!
2. இன்னும் தெளிவாய், நாம் கர்த்தருடைய அதிகாரத்தின் கீழ் மற்றும் **கர்த்தரை மாத்திரமே மையமாய்** வைத்து கூடி வர வேண்டும்!
3. நாம் சபை கூடிவருவது 'கர்த்தரை சந்திக்கும் நேரமாகவே' இருக்க வேண்டும்!
4. கர்த்தரே நம்முடைய முழு ஆர்வமும் மகிழ்ச்சியுமாய் இருக்க வேண்டும்!
5. சபை கூடிவரும் ஆர்வம், யாரோ சில சகோதரர்களை அல்லது சகோதரிகளை சந்திக்கும் ஆர்வமாய் இருந்துவிடக்கூடாது!
6. சபையின் நடுமையத்தில் தலைவராய், **சபைக்கு தலையாய் இருப்பவர் கர்த்தர் மாத்திரமே!** நாமோ, மற்ற எல்லா சகோதர சகோதரிகளுடன் சேர்ந்து, நம் தலைவராகிய இயேசுவுக்கு முன்பாக கூடுகிறோம் என்பதே நோக்கமாயிருத்தல் வேண்டும்!

நாம் ஏன் '**கர்த்தருடைய நாமத்தில்**' கூடி வரவேண்டும்? ஏனென்றால், நம் சரீரப்பிரகாரமாய் கர்த்தர் இங்கு இல்லை என்பதே ஆகும்! சீஷர்களுடைய காலத்தைப்போல், அவர்களோடு இயேசு சரீரப்பிரகாரமாய் இருந்தபோது 'அவருடைய நாமத்தைக் குறித்து' பெரிதாய் என்ன வேண்டிய அவசியம் ஏற்படவில்லை!

> " இப்போதோ, சரீரப்பிரகாரமாய் அவர் நம்மோடு இராதபடியால் 'அவருடைய நாமம்' அதிக முக்கியத்துவம் பெறுகிறது! நம் கர்த்தர் இப்போது பரலோகத்தில் இருக்கிறார். ஆகிலும், தம்முடைய நாமத்தை இந்த பூமியில் கொடுத்திருக்கிறார். ஆகவேதான் அவருடைய நாமத்தில் நாம் கூடிவந்து, அவரை கிட்டிச்சேருகிறோம்!

இவ்வாறு நாம் கூடிவருகையில், அவர் நம் நடுவே வருவதாக வாக்குக்கொடுத்திருக்கிறார்! அதாவது, கர்த்தருடைய ஆவியின் நமது கூடுகை நடுவில் வாசமாயிருப்பார்!

*நாம் கூடிவருகையில் ஒரு பிரசங்கியின் பிரசங்கத்தை கேட்பதற்கு கூடிவருவதைப்போல் இருந்துவிடக்கூடாது. மாறாக, கர்த்தரை*

சந்திக்கிறோம் என்ற இனிமை மாத்திரமே நம் உள்ளத்தை ஆட்கொள்ள வேண்டும். இதற்கு மாறாக, ஒரு பிரசங்கியின் பிரசங்கத்தை கேட்பதற்காக கூடிவந்தால் **'அந்த குறிப்பிட்ட மனுஷனின் நாமத்தில்'** கூடிவந்துள்ளோம் என்றே நீங்கள் பகிரங்கமாய் தெரிவிக்கின்றீர்கள். அநேக இடங்களில், பிரசங்கியின் பெயரை விளம்பரப்படுத்தி, தங்களையும் அறியாமலே "எல்லோரும் இந்த தேவ மனுஷனுடைய நாமத்தில் கூடிவாருங்கள்!" என அழைப்பதாகவே செய்கிறார்கள்!

கர்த்தர் பரலோகத்தில் வீற்றிருந்தாலும், அவருடைய நாமத்தினிமித்தம் நம் மத்தியில் வாசம் செய்கிறார்! அவ்வாறாகவே, கர்த்தருடைய ஆவி நம் நடுவில் உலாவி வருவார். பரிசுத்த ஆவியானவரோ, கர்த்தருடைய நாமத்தை பாதுகாக்கும் ஓர் காவலனாய் சபையில் இருக்கிறார்! அவர் நம் மத்தியில் வாசம் செய்து, எல்லா நாமத்திற்கும் மேலான நாமமாய் கர்த்தருடைய நாமத்தை உயர்த்துவார்! அதனிமித்தமே, 'கர்த்தருடைய நாமத்தில்' கூடுகிற ஜனமாய் நாம் எப்போதும் இருக்க வேண்டும்!

நாம் சபையாய் கூடிவருதலின் முக்கியமான மற்றொரு நோக்கம், கூடிவரும் தேவ ஜனங்களை பக்திவிருத்தி அடையச் செய்து அவர்களை தேவனுக்குச் சொந்தமானவர்களாய் இணைத்துக் கட்டுவதற்கு பிரயாசப்படுவதாயிருக்க வேண்டும்! 1கொரிந்தியர் 14-ம் அதிகாரம் கூறுகிறபடி, நமக்காக மாத்திரமல்ல, சபையிலுள்ள பிறரை பக்திவிருத்தியடைய தீவிரம் கொண்டவர்களாய் இருக்க வேண்டும்! **எனவேதான் சுய-பக்திவிருத்திக்கேதுவான அந்நியபாஷையை விட பிறரை பக்திவிருத்தியடைச் செய்யும் நம்முடைய பங்கு சபையில் பிரதானமாயிருக்கிறது.** இதற்கு மாறாக, நீங்கள் பேசும் அல்லது செய்யும் யாதொன்றும் உங்களுக்கு மாத்திரமே பக்திவிருத்தியாய் இருந்து, மற்றவர்களுக்கு பக்திவிருத்தியாய் இல்லாமலிருந்தால், அதை நீங்கள் பேசாதிருப்பது அல்லது செய்யாதிருப்பது நல்லது.

ஆகவே, நீங்கள் சபைக் கூட்டத்திற்கு வந்து எதைச் செய்தாலும் "நான் சபை கூட்டத்திற்கு உதவுகின்ற நபரா அல்லது சேதம் உண்டாக்குகிறவனா?" என்ற கேள்வியை ஒவ்வொருவரும் கேட்டுப்பார்ப்பது நல்லது. பவுல் அதைக் குறிப்பிடும்போது, சிலர் "நான் ஒரு பாட்டுப்பாட வேண்டும் அல்லது சங்கீதம் சொல்ல வேண்டும்" என்ற சுய விருப்பத்தோடு வருகிறார்கள். அப்படி அவர்கள் பாடிவிட்டால், அது அவர்களுக்கு பக்திவிருத்தியாய் இருக்கலாம், ஆனால் சபைக்கூட்டத்தை ஊக்குவிப்பதாய் இருப்பதில்லை!

“ **எனவே, நாம் பிறரை பக்திவிருத்தியடையச் செய்யும் பாரமில்லாதவர்களாய் இருந்தால், அவர்கள் பேசினாலும் சபையைப் பாதிக்கும்! மௌனமாய் இருந்தாலும் சபையைப் பாதிக்கும்!**

*ஆகவே, நாம் பேசுவதாயிருந்தாலும் அல்லது பேசாமல் மௌனமாயிருந்தாலும், அது கூடிவரும் கூட்டத்திற்கு ஏதுகரமாய், ஜனங்களை பக்திவிருத்தியடையச் செய்வதாய் இருக்க வேண்டும். ஆகிலும், நீங்கள் பேசுவது சபைக்கு தேவையாயிருக்கும்போது அதைப் பேசாமலிருப்பதும் பிழையானது! இவ்வாறாக, எதைச் செய்தாலும் நான் சபையின் பக்திவிருத்திக்கேதுவாய் செய்கிறேனா? என்ற கேள்வியை நீங்கள் கேட்டுப்பார்ப்பது நல்லது. இவை அனைத்திலும்* **ஸ்தல சபையில் பொறுப்பாயிருக்கும் கர்த்தருடைய ஊழியர்கள்,** *சபையின் பக்திவிருத்திக்கு ஏதுவான காரியங்களை நன்கு விசாரித்து நடத்த வேண்டும்!*

*இன்று, சபை கூடிவரும் அநேக கிறிஸ்தவர்கள், தாங்கள் சபையில் ஒழுங்கும் கட்டுப்பாடுமாய், தெய்வ பயத்தோடு கூடிவர வேண்டும் என்ற உணர்வே அற்றவர்களாய் பல ஆண்டு காலமாய் இருக்கிறார்கள்! இவர்களுக்கு சபையில் உள்ள வேறு யாரைக்குறித்தும் அக்கறையிருப்பதில்லை. இவர்கள், தங்களைக் குறித்து மாத்திரமே சிந்திக்கிறபடியால், “சபையின் தலைவரான கர்த்தருக்கும் பரிசுத்த ஆவியானவருக்கும் கூட மதிப்பு தருவதில்லை”. இப்படிப்பட்டவர்களால் முழு சபை கூடுதலுக்கும் பாதிப்பு ஏற்பட வாய்ப்புண்டு! சபை கூடுதலில் பரிசுத்த ஆவியானவர் துக்கமடைந்தால், அன்று சபைக்குவர இருந்த ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை சபை இழக்க நேரிடும்!*

*இதற்கு மாறாக, ஒருவனும் தன்னைக் குறித்து எண்ணாமல், மற்றவர்களுடைய தேவையையும், பிறருடைய பக்திவிருத்தியையும் மாத்திரமே மனதில் கொண்டிருந்தால், பரிசுத்த ஆவியானவர் அக்கூட்டத்தில் மகிமையடைந்தவராய், நமக்குள்ளும், மற்றவர்களுக்குள்ளும் பக்திவிருத்தியின் மழையை ஏராளமாய் பொழியச் செய்வார்! இவ்வாறு, தன்னை மேட்டிமையாய் எண்ணாத தாழ்மையுள்ள ஜனங்களின் சபை கூடுகைக்கு யாரோ சிலர் வந்தால், சபையில் அங்கு தேவபிரசன்னம் இருப்பதைக் கண்டு ‘கர்த்தர் மெய்யாகவே இவர்கள் நடுவில் இருக்கிறார்’ என அறிக்கை செய்து, அவர்களும் கர்த்தரை சபையில் தொழுதுகொள்வார்கள்!*

*- வாட்ச்மென் நீ*

## கர்த்தருடைய ஊழியனின் மகிழ்ச்சிக்கு காரணம்?

*அவன், வாக்குவாதம் செய்வதில்லை*

*கர்த்தருடைய ஊழியக்காரன் எப்போதும் மகிழ்ச்சியோடு ஊழியம் செய்வதற்கு சிறந்த வழி: "அவன் புத்தியீனமான தர்க்கங்களுக்கும், சண்டைகளுக்கும் விலகி, இயேசுவைப்போல், சாந்தம் நிறைந்தவனாய் இருக்க வேண்டும்!" என 2தீமோத்தேயு 2:23,24 கூறுகிறது! பிரதான ஆசாரியரும், மூப்பரும், அவர்மேல் குற்றஞ்சாட்டுகையில், இயேசு மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை எனவும், பிலாத்து இயேசுவை நோக்கி "உன்மேல் எத்தனையோ குற்றஞ் சாட்டுகிறார்களே, நீ அவைகளைக் கேட்கவில்லையா?" என்றவுடன், அவரோ 'ஒரு வார்த்தையும்' மாறுத்தரமாகச் சொல்லவில்லை! அதனிமித்தம் அந்த தேசாதிபதி மிகவும் ஆச்சரியப்பட்டான்! என மத்தேயு 27:12-14 வசனங்களில் வாசிக்கிறோமே!*

*ஒருவேளை அவர் மனுஷனுக்குரிய மார்க்கமாய் தன் நியாயங்களை எடுத்து வைத்துப் பேசியிருந்தால், 'அந்த எத்தனையோ குற்றச்சாட்டுகளை' விசாரிக்க, கவர்னர் "வாய்தா" கூறி, இயேசுவின் வழக்கு மன்றம் 4- வருடமோ, 14 வருடமோ கூட தொடர்ந்திருக்கும்! ...நாமும், "மனுஷீக நியாயத்தை மரணத்திற்கு ஊற்றும்" இரட்சிப்பின் வழியை அறியாமல்,* **சண்டைக்காரர்களாய் தேங்கி,** *அழிந்திருப்போம்!*

*கிறிஸ்தவ குடும்பங்களில், இயேசு கற்பித்த "உங்கள் மனுஷீகமும், மனுஷீக நியாயமும் மரணத்திற்கு ஊற்றப்படட்டும்" என்ற சத்தியம் செழிப்புடன் இருந்தால், உங்கள் குடும்பத்தில் "இயேசுவின் மகிமை" நிச்சயமாய் வெளிப்பட்டுவிடும்! (யோவான் 2:11). இதுவே, அன்று கானாவூர் கலியாணத்தில் "இயேசு செய்து காண்பித்த" அற்புதமாகும்!*

> **"நான் சொல்லும் நியாயம் சரி!" என கணவனும் "இல்லை, நான் சொல்லும் நியாயம் சரி!" என மனைவியும் கூறுவது "பார்ப்பதற்கு கெட்டதாய் தோன்றாமல், 'தண்ணீராகவே' தோன்றுகிறது!" ஆனால், அதில் திவ்ய ருசி இருப்பதில்லையே!**

*குறைந்தது, இருவரில் ஒருவராவது, தங்கள் நியாய தர்க்கங்களை மறுத்து 'அந்த மனுஷீகத்தை' ஆறு ஜாடியில் ஊற்றி விட்டால் "தெய்வ ருசி" வெளிப்பட்டுவிடுமே! திருமண ஜீவியம் நாளுக்கு நாள் அன்பிலும் ஐக்கியத்திலும் அதிக நற்கந்தமாய் மலர்ந்து விடுமே! இதுபோன்ற குடும்பங்கள் சேர்ந்து வாழும் சபை, பரலோகமாய் ஓங்கி நிற்கும் என்பதில் சந்தேகம் ஏதுமில்லை!!*

*- T.ரத்தினகுமார்*

## பிறருக்காக வாழ்ந்த தெய்வதாசன்

# ‘அக்ஸல் ஸ்மித்’



சுமார் 100 வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த உத்தம பரிசுத்தவான் அக்ஸல் ஸ்மித் என்ற தாழ்மையான தாசன்! தன் இளம் வாலிப வயதில் சத்தியங்களை அறிந்து கர்த்தருக்கு சாட்சியாக வாழவும், ஊழியம் கொள்ளவும் தீவிரம் கொண்டவர்தான் அக்ஸல் ஸ்மித். ஒரு பல் மருத்துவராக இருந்த அவர், தன் பெரும்பாலான மருத்துவ பணியை ஏழைகளுக்காகவே தொண்டு செய்த தயாள உள்ளம் கொண்டவர். நார்வே நாட்டின் ‘கிறிஸ்டியன் சாண்ட்’ என்ற நகரில் 1881-ம் ஆண்டு பிறந்த அவர், ஜோஹன் ஆஸ்கார் ஸ்மித்தின் இளைய சகோதரன். நார்வேயிலுள்ள ‘புரூண்ஸ்டட் கிறிஸ்டியன் சர்ச்’ ஸ்தாபகராய் அவருடைய மூத்த சகோதரன் இருந்தார். தன் மூத்த சகோதரனின் ஜீவியம், இயேசுவின் ஜீவியத்தைப் போல் இருப்பதை கண்ணாரக் கண்ட அவர், மிகவும் கவரப்பட்டு பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தால் நிறைந்தார்.

நடைமுறை கிறிஸ்தவ ஜீவியத்தில் பேராவல் கொண்ட அக்ஸல் ஸ்மித், ஜீவியத்தின் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இயேசுவின் மாதிரியை வாழ்ந்து காண்பித்தார். 1906, 1907, 1908 -ம் வருடங்களில் தீவிர மிஷனெரியாய் சென்று கர்த்தருக்கு தியாக ஊழியம் செய்தார். அக்காலங்களில் அனேகரை கிறிஸ்துவுக்கு நண்பர்களாய் மாற்றினார். ‘மறைவான பொக்கிஷங்கள்’ என்ற பத்திரிக்கை நிறுவனத்திற்கு அஸ்திபாரமாய் திகழ்ந்தார். அந்த பத்திரிக்கை பல மொழிகளில் பல நாடுகளுக்கும் சென்று இன்றும் அனேகரை ஆசீர்வதித்து வருகிறது. அந்த பத்திரிக்கையில் சுமார் 150 செய்திகளை எழுதியுள்ளார். மேலும் “விசுவாசத்தை விட்டு வழி விலகாதிருங்கள்” மற்றும் “ஒரு விசுவாசியின் வளர்ச்சியில் நான்கு படிகள்” என்ற அருமையான புத்தகங்களை எழுதினார். அந்த புத்தகங்களில் அவருடைய இனிய ஜீவியமும், ஜனங்களுக்காக கொண்ட பரிதவிப்பும் காண முடிகிறது.

ஒருமுறை ஒரு ஏழை மீனவனுக்கு பல் வைத்தியம் செய்ய சுமார் 2- நாட்கள் அதிகம் பிரயாசப்பட்டார். தன்னிடம் பணம் இல்லாத சூழ்நிலையில் அந்த மீனவன் சற்று தயக்கத்துடன், எவ்வளவு கட்டணம்? என்று கேட்டான். ஒரு புன்னகையோடு “பணம் எதுவும் வேண்டாம்!” என அன்போடு கூறினார். வைத்திய நேரத்தில் அவனுடைய பாக்கெட்டில் வைக்கப்பட்ட 500 ரூபாயை கண்டு ஆச்சரியமான திகைப்படைந்தான் அந்த மீனவன். தனது 38-ம் வயதில் சுகவீனமடைந்த அக்ஸல் ஸ்மித்தை பார்த்து அவருடைய மார்பை சுட்டிக் காண்பித்து ‘பிழைத்திட நம்பிக்கை ஏதும் இல்லை’ எனக் கூறினார்கள். அதற்கு அவர் “நீங்கள் சுட்டிக்காட்டும் இருதயத்திற்குள் நித்திய ஜீவன் இருக்கிறது! நான் இயேசு கிறிஸ்துவின் மீது விசுவாசம் கொண்டவன்” என்ற புன்சிரிப்போடு தன் இளம் வயதில் கர்த்தருக்குள் மரித்தார். இன்று, அவர் மரித்தும் அநேக பரிசுத்தவான்களுக்கு உயிருள்ள சாட்சியாய் எரிந்து கொண்டிருக்கிறார்.

- நிரூபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்

## மரண வீடு, இரட்சிப்பின் வீடாய் மாறிய விந்தை!

ஒரு தடவை மரணம் சம்பவித்த ஒரு சிறந்த கிறிஸ்தவ வீட்டில் அடக்க ஆராதனை நடந்தது. ஆராதனையின் முடிவாக, அந்த வீட்டின் மகள் தனது தகப்பனை அணைத்தவாறே அழைத்துக் கொண்டு வந்தாள். அவளுடைய தாயார்தான் மரணமடைந்து பிரேதப்பெட்டியில் வைக்கப்பட்டிருந்தார்கள்! அந்த வயதான மனிதர் பிரேதப் பெட்டியண்டை வந்து குனிந்து தனது வாழ்நாட்காலம் முழுவதும் தன்னுடன் வாழ்க்கையில் பயணம் செய்த தனது அன்பு மனைவியைப் பார்த்து "சுகமாய்ப் போய் வாருங்கள் **(Good Bye)** நான் உங்களை விரைவில் சந்திப்பேன்" என்று சொன்னார்! அவருக்குப் பின் அவரது மகளும் அப்படியே சொன்னாள்! அவளுக்குப் பிறகு அவளுடைய 2 சகோதரர்களும் அவ்வண்ணமாகவே தங்களது தாயின் சடலத்தைப் பார்த்து குனிந்து சொன்னார்கள்!

மூத்த மகனோ ஒரு குடிகாரன். அவன் வீட்டின் கதவண்டை தனது கண்களில் கண்ணீரை வடித்தவண்ணமாக நின்று கொண்டிருந்தான். அவனது தம்பி அவனண்டை சென்று "டாம், நீயும் வந்து அம்மாவுக்கு நல் விடை கொடு" என்று சொன்னான். தன்னுடைய சரீர பெலவீனம் மற்றும் மதுபான பழக்கம் காரணமாக அவன் முன்னேறி வர தயக்கம் காண்பித்தான். ஆயினும், அந்த வாலிபனைப் போன்று அத்தனை துயரத்துடன் தன் தாய்க்காக அழுத ஒரு வாலிபனை நான் கண்டதே இல்லை. அவன் ஏங்கி ஏங்கி "அம்மா, அம்மா" என்று கதறி அழுதவனாக நின்று கொண்டிருந்தான். அதைப் பார்த்த அவனது சகோதரி அவனண்டை வந்து "டாம், அம்மாவுடைய மரணத்தை நீ மிகவும் பெரிதாக எடுத்துக் கொள்ளாதே. அம்மா, மோட்சத்திற்குச் சென்றிருக்கின்றார்கள். நீயும் கூட விரைவில் அவர்களைச் சந்திக்கலாம்" என்று சொன்னாள். அந்த வாலிபன் தனது ஒரு கரத்தை என் மீதும் அடுத்த கரத்தை அவனது சகோதரியின் மீதும் போட்டவனாக "ஓ, என் தேவனே, நான் மோட்சம் போகப் போவதில்லை, நான் மோட்சம் போகப்போவதில்லை" என்று சொல்லி கதறி அழுதான்.

உடனே அவனுடைய சகோதரியும், தம்பியும் "அண்ணா, இப்போது நீங்கள் அழுது தாழ்மையுடன் பேசிய வார்த்தைக்கு, பரலோகத்தின் கதவு உங்களுக்காக திறக்கப்பட்டது" என கூறிய அடுத்த கணமே, நல்ல விசுவாசம் பிறந்து அந்த குடிகார அண்ணன், அம்மாவின் சடலத்திற்கு அருகில் முழங்கால்படியிட்டு, "அம்மா, நானும் இரட்சிக்கப்பட்டுவிட்டேன்! உங்களை நானும் சீக்கிரத்தில் பரம தேசத்தில் காண்பேன்" என மெய் சிலிர்க்க கூறினான்!

- சுவிசேஷ மலர்

பணம் அனுப்ப QR பயன்படுத்தவும்

maduraichristianfellowship@indianbk

பரலோக பொக்கிஷங்கள்

**Published and Owned by:**
**Madurai Christian Fellowship, Regd Society,**
***Editor* T.Rathnakumar, Madurai.**
**Printed by SFA Print (P) Ltd., Sivakasi.**